**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 34 of 2021**

**Prosecution Witness : PW9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சரவணக்குமார் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.29.12.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மங்களமேடு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது கல்லக்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 03.01.2021ம் தேதி ராஜ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.13/2021, இதச பிரிவுகள் 279, 304 (A)–ன் கீழ் 18.30 மணிக்கு வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். பின்னிட்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

காவல் ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அடுத்த நாளே 04.01.2021 என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார். அதன்பிறகு என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. அ.சா.1 03.01.2021 அன்று மாலை 6.30 மணிக்கு என்னிடம் எழுத்து மூலமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3 முதல் தகவல் அறிக்கை அடுத்த நாளே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 06.01.2021 அன்று தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக புகாரும் முதல் தகவல் அறிக்கையும் பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/—செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் (FAC),
இலால்குடி.